பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:44 | 03.01.2024 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053


# மதுபானசாலையை அகற்றக்கோரி மக்கள் போராட்டம்

மக்களின் எதிர்ப்பை மீறி உடுப்பிட்டியில் பாடசாலைகள், ஆலயங்கள் மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை அகற்றக் கோரி இன்று காலை 9.00 மணிக்கு உடுப்பிட்டிச் சந்தியில் ஆரம்பமான கண்டன ஆர்ப்பாட்டம் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம் முன்பாக முடிவடைந்தது.

21 சமூக அமைப்புகள் இணைந்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், பாடசாலைக்குச் செல்லும் வழியில் மதுபானசாலை வேண்டாம், இது இரு குடும்பங்களின் பிரச்சினை அல்ல, உடுப்பிட்டி மக்களின் பிரச்சினை, மதியை போக்கும் மதுவை அனுமதிக்காதே, பிரதேச செயலாளரே நீங்கள் வழங்கிய அனுமதியை இரத்துச் செய், மதிப்பிற்கு உரிய ஊடகங்களே வடக்கிற்கு வரும் ஜனாதிபதியின் காதுக்கு செல்லும்வரை பகிருங்கள், சீரழிக்காதே சீரழிக்காதே, மாணவ சமுதாயத்தை சீரழிக்காதே உட்பட பல்வேறு கோஷங்களை எழுப்பி பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.




## வட்டுக்கோட்டை இளைஞனின் மரணம் “மனித ஆட்கொலை”

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞன் நாகராசா அலெக்ஸ் இன் மரணம் “மனித ஆட்கொலை” என யாழ்.நீதவான் நீதிமன்றம் நேற்று கட்டளை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19 ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

குறித்த வழக்கு நேற்று (2) செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞனின் உடலில் காணப்பட்டதாகவும் இதனால் உயிரிழப்பு நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்களின் அடிப்படையில் இளைஞனின் உயிரிழப்பானது, மனித ஆட்கொலை என நீதவான் மரண விசாரணை கட்டளையின் போது குறிப்பிட்டார்.

இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்ததாக தெரிவித்த நிலையில், இது வரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மற்றைய சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணை பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார்.

அதோடு சம்பவத்தில் குற்றத்தில்... (பக்:02)

## ஜனாதிபதி யாழ்ப்பாண விஜயம் 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் போது அவருக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திருவேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உட்பட 8 பேருக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் நேற்று [2] வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்க உள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான போராட்டத்தை தடுக்கும் வகையில் தடைக் கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில், இன்று புதன்கிழமை (03) மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டுள்ளது.

## தென்கொரியாவுக்கு சென்ற இலங்கையர்

100 இலங்கையர்களைக் கொண்ட குழு தென்கொரியாவிற்கு வேலைக்காகச் சென்றது, இது 2024 இல் வெளியேறிய முதல் குழுவாகும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் செய்தியின் படி, இன்று (ஜனவரி 03) ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானத்தில் குழு புறப்பட்டது.

தென்கொரியாவில் வேலைவாய்ப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 832 ஆவது குழுவாகும். இவர்கள் உற்பத்தித்துறையில் வேலைகளைப் பெறுவார்கள்.

இலங்கைக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இந்த வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் தென் கொரியாவில் வேலைவாய்ப்பிற்காக மொத்தம் 6,412 இலங்கையர்கள் சென்றுள்ளனர்.

## வட்டுக்கோட்டை இளைஞனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்ற கட்டளையின் பிரதியை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்புமாறும் மன்று கட்டளையிட்டது.

மேலும், வழக்கு விசாரணை ஆவணங்களை சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு பாரப்படுத்துமாறு நீதிமன்ற பதிவாளருக்கு நீதவான் அறிவுறுத்தினார்.

அதேவேளை இந்த வழக்கில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் நீதவான் நீடித்து உத்தரவிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் டெங்கு நோய் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள், இராணுவம், பொலிஸார் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை இன்று (03.01.2024) காலை தொடக்கம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்திருப்பதனால் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகள் பரவக்கூடிய சிறிய பாத்திரங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், ஏனைய நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை அகற்றுமாறும், டெங்கு அபாய நிலையினை கருத்திற்கொண்டு மக்களை செயற்படுமாறும் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்த நியமனம் கோரி புகையிரதக்கடவை காப்பாளர்கள் புறக்கணிப்பு

ஜனாதிபதியின் வடக்குக்கான விஜயம் இடம்பெறவுள்ள நிலையில் தமக்கான நிரந்த நியமனம் கோரி வடக்குக் கிழக்கில் உள்ள புகையிரதக்கடவை காப்பாளர்கள் 04 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 06 ஆம் திகதி காலை 6 மணி வரையான 48 மணி நேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக வடக்குக் கிழக்கு புகையிரதக்கடவை காப்பாளர் சங்கத்தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

## துருக்கியுடன் ஒப்பந்தம் செய்தது ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம்

ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கும் துருக்கிய விண்வெளி நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது. மனிதவள மேம்பாட்டு ஒத்துழைப்புக்காக இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஜெனரல் சர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்கள் துருக்கிய விண்வெளி ஏஜென்சியின் சர்வதேச பயிற்சித் திட்டத்தில் பயிற்சியாளர்களாக பங்கேற்க வாய்ப்புள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.


அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# இரசாயன உரங்களுக்கு வட் இல்லையா?

இரசாயன உரங்களுக்கு அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரியை (வட்) அமுல்படுத்த வேண்டாம் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சாதகமாக பதிலளித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்களின் பெரும் விமர்சனங்களுக்கு மத்தியில் அரசாங்கம் திங்கட்கிழமை (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் 15% இலிருந்து 18% ஆக 3 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று (02) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மஹா பயிர்ச் செய்கை காலத்துக்கு தேவையான யூரியா, மியூரேட் ஒப் பொட்டாஷ், டிரிபிள் சூப்பர் பாஸ்பேட் போன்ற அனைத்து இரசாயன உரங்களும் முன்னைய விலையிலேயே நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் எனவே அங்கு வட் அதிகரிப்பால் அவற்றின் விலைகள் உயர வாய்ப்பில்லை.

எந்தவொரு வியாபாரியும் அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்தால், அவ்வாறான நபர்களை அமைச்சுக்கு தெரிவிக்குமாறு விவசாயிகளிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமீபத்திய வட் திருத்தத்திலிருந்து இரசாயன உரங்களை விலக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என்றும் அவர் கூறினார். அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் தர்ம வன்னிநாயக்கவை தொடர்பு கொண்டு கேட்டதுடன், இரசாயன உரங்களை வட் அதிகரிப்பில் இருந்து விலக்குமாறு ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் அமரவீர கோரிக்கை விடுத்ததாக அவர் தெரிவித்தார். “ஜனாதிபதி கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்தார். எனவே, வரும் ஏல பருவத்திலும் விவசாயிகள் தற்போதைய விலைக்கே உரங்களை கொள்முதல் செய்ய முடியும் என நம்புகிறோம்” என்றார்.


ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள் தவிர மற்ற பொருட்களுக்கான வட் விலக்குகளை நீக்குவதுடன், இந்த ஆண்டு (2024) ஜனவரியில் வட் விகிதம் 18% வரை அதிகரிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஒரு சில அத்தியாவசியப் பொருட்கள்.

இதேவேளை, சிலோன் பெர்டிலைசர் கம்பனி லிமிடெட் மற்றும் கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் ஆகிய இரண்டு அரச உர நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதற்கு அமைச்சு அண்மையில் தீர்மானித்திருந்தது. அமைச்சின் கூற்றுப்படி, தற்போது இரண்டு தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபைகளின் கீழ் உள்ள இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைக்க முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் ஒரு தலைவர் மற்றும் இயக்குநர் குழுவின் கீழ் வைக்கப்படும்.

# குதிரையில் உணவு விநியோகம் செய்த ஊழியர்

இந்தியாவில் புதிய வாகன சட்டத்திற்கு எதிராக லொறி ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், எரிபொருள் மையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதற்கு மத்தியில், ஹைதராபாத்தில் குதிரையில் உணவு விநியோகம் செய்யும் ஸோமாட்டோ ஊழியரின் காணொளி வைரலாகி வருகிறது.

ஸோமாட்டோ பையை தோளில் அணிந்தபடி, இம்பீரியல் ஹோட்டலுக்குப் பக்கத்தில் அமைந்துள்ள சஞ்சல்குடாவுக்கு குதிரையில், உணவு விநியோகம் செய்பவர் வருவதை அந்தக் காணொளியில் பார்க்க முடிந்தது.



ஏன் குதிரையில் வருகிறீர்கள் என்று வழிப்போக்கர்கள் அவரிடம் கேட்டபோது, “பெற்றோல் இல்லை. மூன்று மணி நேரம் வரிசையில் காத்திருந்தேன். நான் ஓடரை எடுத்துவிட்டு வெளியேறினேன். ஆனால் பெற்றோல் கிடைக்கவில்லை” என தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்புவதற்காக பலர் ஒரே சமயங்களில் எரிபொருள் மையங்களில் கூடியதால், மாநகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய தாக்குதலில் ஹமாஸ் துணைத் தலைவர் கொலை



லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் ஹமாஸ் துணைத் தலைவர் கொல்லப்பட்டார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் செவ்வாய்க்கிழமை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், ஹமாஸ் துணைத் தலைவர் கொல்லப்பட்டதாக அந்த அமைப்பும், லெபனான் பாதுகாப்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதலில் சலே அல்-அரூரி அவரது பாதுகாவலர்களுடன் கொல்லப்பட்டதாக, உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி ஏஎஃப்பி இடம் கூறினார்.

தாக்குதலில் இலக்கு வைக்கப்பட்ட கட்டடத்தின் இரண்டு தளங்கள் மற்றும் ஒரு கார் சேதமடைந்ததாக மற்றொரு உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

லெபனானின் ஈரான் ஆதரவு ஹெஸ்பொல்லா இயக்கத்தின் கோட்டையான பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில், தாக்குதல் நடைபெற்றதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறுகின்றன.

அல்-அரூரி உயிரிழந்ததை ஹமாஸ் தொலைக்காட்சி உறுதி செய்துள்ள நிலையில், லெபனான் தேசிய ஊடகங்கள் இஸ்ரேல் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது.

# ஜப்பான் விமானவிபத்து 5 பேர் பலி

டோக்கியோவின் ஹனேடா விமான நிலையத்தின் ஓடுபாதையில் இன்று ஒரு ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானம் தீப்பிடித்து எரிந்ததால் ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

ஏர்லைன்ஸ் விமானத்திலிருந்த 367 பயணிகளும் 12 பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். கொல்லப்பட்ட 5 பேரும் கடலோர காவல் படை விமானத்தில் இருந்தவர்கள் ஆவர்.

கடலோர காவல்படை விமானத்தில் இருந்த ஆறு பணியாளர்களில் ஒருவர் பத்திரமாக மீட்கப்பட்டார். ஆனால், மற்ற ஐந்து பேரும் பலியாகினர்.

இந்த விபத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. ஆனால்,



பயணிகள் விமானம் கடலோர காவல்படை விமானத்தின் மீது மோதியதாக தொலைக்காட்சி செய்திகள் கூறுகின்றன.

# ஆப்கானில் பூகம்பம்

ஜப்பானில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்ததாகவும் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி 60க்கும் மேற்பட்டோர் பலியானதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மேலும் அந்நாட்டில் தற்போது தீவிரமாக மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் ஜப்பானின் நிலநடுக்கம் குறித்த அதிர்ச்சி மக்கள் மத்தியில் நீங்கும் முன்னரே ஆப்கானிஸ்தானில் இன்று அரைமணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் அந்நாட்டு மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட பரீட்சை நிலையம்

அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட பொலன்னறுவை, வெலிகந்த, அரலகங்வில, திம்புலாகல கல்விப் பிரிவுகளில் உள்ள பரீட்சார்த்திகளுக்காக மனம்பிட்டிய சிங்கள மகா வித்தியாலயத்தில் இந்த விசேட பரீட்சை நிலையம் நிறுவப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட பரீட்சை நிலையத்தில் ஆணையாளர் வழங்கிய பரீட்சை அனுமதி அட்டை செல்லுபடியாகும் என்றும் பரீட்சைக்குச் செல்லத் தடை இல்லாத பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட அதே பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல வேண்டும் எனவும் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1,182 சந்தேக நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று (02) முதல் இன்று (03) அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,182 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 44 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

3 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், போதைக்கு அடிமையான 47 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட அதிரடிப் படையில் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலில் இருந்த 138 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# போதகர் ஜெரோமுக்கு பிணை



மத நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் கருத்து தெரிவித்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு கோட்டை நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டுள்ளது. இது 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் தலா 10 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணை அடிப்படையில் இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

# மின்சாரசபை ஊழியர்களின் விடுமுறை இரத்து



மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாறியுள்ள நிலையில், இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் நேற்று (02) முதல் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் பொறியியலாளர் நரேந்திர டி சில்வா அறிவித்துள்ளார்.

அவசர தேவைகளுக்காக சம்பந்தப்பட்ட கிளை / பிரிவின் ஊடாக நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் மட்டுமே ஊழியர்கள் விடுமுறையை எடுக்க முடியும் என்றும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக இன்று (03) முதல் 3 நாள் தொடர் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் அறிவித்திருந்தது.

இது தொடர்பான சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சருக்கு அறிவிக்கவுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

# விதி மீறிய 180 நிறுவனங்களுக்கு அபராதம் விதிப்பு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூற்றுப்படி, தடைசெய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தி செய்த 7,000க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கடந்த வருடத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

விதிகளை மீறிய 180இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கழிவு முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்தார்.

# போதைப் பொருளுடன் இருவர் கைது

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் யாழ்.கோண்டாவிலுள்ள வீடொன்றிலிருந்து போதைப்பொருட்களுடன் இரு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை 50 ஆயிரம் ரூபா பணத்துடன் யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அவரது வீட்டைச் சோதனைக்குட்படுத்திய போது 500 கிராம் கேரளக் கஞ்சா, 100 கிராம் ஹெரோய்ன், ஆறு போதை மாத்திரைகள், போதை மருந்தேற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள் என்பன மீட்கப்பட்டன என்றும் அதேவேளை அங்கிருந்த மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஒருவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்பதோடு போதைப்பொருள் விற்பனையிலும் ஈடுபடுவர் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வவுனியா வைத்தியசாலையில் கொவிட் மரணம்

பதவியாவைச் சேர்ந்த ஒருவர் சிறுநீரகநோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது மரணமானார்.

அவர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஒரு வருடங்களிற்கு பின்னர் மீண்டும் ஒருவர் கொவிட் தொற்றால் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தின் எல்லையான வெருகல் மகாவலி கங்கை பெருக்கெடுத்த காரணமாக அக் கிராமத்தைச் சூழ முற்றாக பாதிக்கப்பட்ட 47 குடும்பங்கள் இரண்டு இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு ஜேர்மன் நாட்டில் வசிக்கும் எஸ். தனபாலசிங்கம், சுவிஸ் லாந்து சைவநெறிக்கூடம் ஞானலிங்கேஷ்வரர் ஆலயம் ஆகியன அனுப்பிய உதவித்தொகை, உலர் உணவு ஆகியனவற்றை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து வழங்கப்பட்டது.

கதிரவெளி கனிஷ்ட வித்தியாலயம், வெருகல் கங்கைக்கு அருகாமையில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன், பேரவை உறுப்பினர்கள், கதிரவெளி கிராம அதிகாரி விஜயராஜா, கதிரவெளி பொது அமைப்புகளின்



பிரதிநிதிகள் இணைந்து வழங்கினர்.

# அவுஸ்திரேலியாவில் “பிங்க் டெஸ்ட்” போட்டி




பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகியவற்றுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று புதன்கிழமை சிட்னியில் நடைபெறுகிறது சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் இந்த ஆண்டின் முதல் டெஸ்ட் போட்டி ‘பிங்க் டெஸ்ட்’ என அழைக்கப்படுகிறது. போட்டியின் போது மைதானத்தைச் சுற்றியுள்ள ஸ்டாண்டுகள் மற்றும் அடையாளங்கள், நடுவில் உள்ள ஸ்டம்புகள் உட்பட அனைத்தும் இளஞ் சிவப்பு நிறத்தில் இருக்கும். அவுஸ்திரேலிய வீரர்கள் பிங்க் தொப்பி அணிந்திருப்பார்கள்.

மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவதே பிங்க் டெஸ்டின் நோக்கமாகும். முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் கிளென் மெக்ராத்தின் மனைவி ஜேன் புற்றுநோயால் மரணமானார். 2005 இல் மெக்ராத் தனது மனைவிக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்ட பிறகு மெக்ராத் அறக்கட்டளையைத் தொடங்கினார். இந்த அறக்கட்டளை கிரிக்கெட் அவுஸ்திரேலியாவுடன் இணைந்து புற்று நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், நோயாளிகள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்காக நிதி சேகரிப்பதும் இதன் நோக்கமாகும். அதன் வலைத்தளத்தின் படி, பிங்க் டெஸ்ட் அறக் கட்டளை அதன் முன் முயற்சிகளுக்காக $22 மில்லியனுக்கும் மேல் திரட்ட உதவியது.

புற்று நோயால் பாதிக் கப்பட்ட ஜேன் இறந்து ஒரு வருடம் கழித்து, 2009 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய வற்றுக்கிடையே முதல் பிங்க் டெஸ்ட் நடந்தது. அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் ஆகியவற்றுக்கிடையே இன்று நடைபெறுவது 16 ஆவது பின்க் டெஸ் போட்டி ஆகும்.

அவுஸ்திரேலியா இது வரை 15 பிங்க் டெஸ்டில் போட்டிகளில் விளையாடி 8 வெற்றி, 6 டிரா, ஒரு தோல்வியைச் சந்தித்தது. பிங்க் டெஸ்டில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய ஒரே அணி இங்கிலாந்து.

2011 ஆம் ஆண்டு ஒரு இன்னிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வென்றது.

# இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீட்டை தடுக்க சட்டத் திருத்தம்



அரசியல் தலையீடு காரணமாக ஐ.சி.சியால் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வாரியம், எதிர்காலத்தில் அரசியல் தலையீட்டை தடுக்கும் வகையில், புதிய சட்டத்தை விரைவில் அமுல்படுத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அரசியல் ரீதியாக செல்வாக்கு உள்ளவர்கள் எந்த வகையில் கிரிக்கெட் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடுவதற்கு இந்தச் சட்டம் தடை விதிக்கிறது.

கடந்த நவம்பரில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை துணைக்குழு, தேவையான பரிந்துரைகளுடன் இதற்கான சட்ட முன்மொழிவை திங்கட்கிழமை (ஜனவரி 1) அன்று அவருக்கு சமர்ப்பித்துள்ளது.

முன்னதாக, ஒருநாள் உலகக்கோப்பை தோல்விக்குப் பிறகு, இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ரோஷன் ரணசிங்க கிரிக்கெட் வாரியத்தை கூண்டோடு கலைத்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் வாரியம் நெருக்கடியான நிலையில் இருக்கும்போது, விளையாட்டு அமைச்சருக்கு இடைக்கால குழுக்களை நியமிக்கும் அதிகாரத்தை வழங்கிய 1973 ஆம் ஆண்டு சட்டத்தை நீக்க இந்த புதிய சட்டத்தில் விதிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

1996 ஒருநாள் உலகக் கோப்பையில் நாட்டின் வெற்றிக்குப் பிறகு இலங்கை கிரிக்கெட் சபை ஒரு முக்கிய பணம் கொழிக்கும் விளையாட்டு அமைப்பாக மாறியுள்ளது.

இதனால், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும், கிரிக்கெட் சபையில் உயர் பதவிகளை கைப்பற்றிவிட அல்லது உயர் பதவியில் உள்ளவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த பலரும் முயற்சி செய்து வருவது தான் பிரச்சினைகளுக்கு ஆணி வேராக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 03.01.2024 அன்று வெளியிடப்பட்டது.